02.06.2026
O.S.No. 103/2015
DW1– குழலி – த/பெ. சுப்பையா நாடார்
Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 02.06.2026.

குறுக்கு விசாரணை : ( வாதி தரப்பில்)

1. நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். வாதி எங்கள் மீது வீடு தொடர்பாக வழக்கு தாக்கல் செய்துள்ளார். என் தாய், தந்தை வாதிக்கு எந்த கிரையமும் கொடுக்கவில்லை என்பது 20ஆண்டுகளுக்கு முன்பு தெரியும். சாட்சியிடம் வாதியின் கிரையம் செல்லாது என வழக்கு தாக்கல் செய்தீர்களா என்று கேட்டதற்கு அறிவிப்பு வந்தது, அதற்கு பதில்அறிவிப்பு அனுப்பினோம் என்று கூறினார். பதில் அறிவிப்பை என் பெற்றோர் தான் அனுப்பினார்கள்.

2. இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.18 ஆவணங்கள் வழக்கிற்கு பின்னிட்டு தயார் செய்த போலியான ஆவணங்கள் என்றால் சரியல்ல, எல்லா ஆவணங்களும் உண்மையான ஆவணங்கள்தான். ஏன் ஆவணங்களை எதிருரையுடன் தாக்கல் செய்யவில்லை என்றால் என் பெற்றோர் இறந்தபிறகு, வழக்குவிவரங்கள் எனக்கு தெரிந்தபின்பு தான் தாக்கல்செய்தேன்.

3. பிராது தபசில்சொத்து ஆதியில் என் தாயின் பெயரில் இருந்தது. பி.வா.சா.ஆ.6 ஆவணம் எப்போது தயார் செய்யப்பட்டது என்றால் வழக்கறிஞர் அலுவலகத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது. பி.வா.சா.ஆ.6 ஆவணம் எங்களுக்கு அனுப்பப்பட்டதை காட்டக்கூடிய அஞ்சல் ஒப்புகை அட்டையோ, அஞ்சல் உறையோ தாக்கல் செய்யவில்லை என்றால் அந்த

சமயத்தில் என் பெற்றோர் உயிருடன் இருந்தார்கள், என்னிடம் அறிவிப்பு மட்டுமே உள்ளது. பி.வா.சா.ஆ.6 ஆவணத்தில் தட்டச்சு செய்யப்பட்ட வாசகங்கள் பழையதாகவும், அதிலுள்ள கையொப்பம் புதிதாகவும் உள்ளது என்றால் சரியல்ல, அதிலுள்ள கையொப்பம் புதிதாக இல்லை.

4. பி.வா.சா.ஆ.6 ஆவணத்தில் வழக்கறிஞரின் முத்திரை(சீல்) இல்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.7 ஆவணம் நான் சாட்சி சொல்லவரும்போது தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.7 ஆவணம் உண்மையான ஆவணம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.7 ஆவணத்தில் கண்ட முதல் வழக்கறிஞரை தவிர மீதமுள்ள 2 வழக்கறிஞர்களும் 2008 ம் வழக்கறிஞராக பதிவு செய்யவில்லை என்றும், அவர்கள் பெயரை வைத்து போலியான நான் பி.வா.சா.ஆ.7 ஆவணம் உற்பத்தி செய்தேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.6,7 ஆவணங்கள் வழக்கிற்காக போலியாக உற்பத்தி செய்யப்பட்டதால் எனவே அது ஏற்புடைய சாட்சியில்லை என்றால் சரியல்ல.

5. பி.வா.சா.ஆ.7 ஆவணத்தில் கண்ட வழக்கறிஞர் முகவரியில் 2008 ல் அவ்வாறான முகவரி கிடையாது என்றும், மேற்படி கட்டிட அனுமதி 2015 ல் வழங்கப்பட்டது என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது.

வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

**ஒப்பம்/- K.N. குரு**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**செங்கோட்டை**